மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலேயில் வேலே நிறுத்தம்

*340 வின.—கொளத்தூர் கோதண்டம் : மாண்புமிகு தொழிலாளர் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலேயில் 1969-ம் ஆண்டு, டிசம்பர் மாதத்தில் வேலே நிறுத்தம் நடந்ததா?

(இ) ஆம் எனில் அதற்கான காரணம் என்ன?

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் : (அ) ஆம். இந்த ஆலேயில் 28—11—69 முதல் 10—12—69 முடிய ஒரு வேலே நிறுத்தம் நடந்தது.

(இ) சென்னே 3-வது தொழிலாளர் துறை அலுவலரின் நிலுவையிலிருந்த கோரிக்கைகளேத் தீர்ப்பதில் நிர்வாகத்தின் தரப்பில் தாமதம் ஆனதால் வேலேநிறுத்தம் செய்ய நேர்ந்தது என்பது தொழிலாளர்கள் சங்கத்தின் வாதம். சங்கத்தலேவர் மதுராந்தகத்தில் நிர்வாகத்துடன் பேச்சு வார்த்தை நடத்தி வந்த சமயத்தில் அவருக்குப் போக்குவரத்து வசதி கொடுப்பதில் தாமதம் ஏற்பட்டதே வேலே நிறுத்தத்திற்கு உடனடி காரணமாகும்.

திரு. கொளத்தூர் கோதண்டம் : வேலேநிறுத்தம் நடைபெற்ற நேரத்தில் வேறு தொழிலாளர்களே வைத்து வேலே நடத்தினர்களா இல்லேயா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் : இந்தத் தொழிற்சாலேயில் 469 தொழிலாளர்கள் இருக்கிருர்கள். அறுபது பேர்கள்தான் வேலேக்குப் போகவில்லே என்ற தகவல் வந்திருக்கிறது. பின்னுல் வேலே நிறுத்தம் சுமுகமாக முடிந்துவிட்டது.

Tank Bund Poramboke lands in Peravallur

*318 Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the land T.S. No. 382/1 measuring 110.72 acres of Peravallur village, North West Taluk, Madras was transferred from Tank Bund Poramboke to house-sites:

(*b*) whether the hut dwellers of Muthuvelar Kudiyiruppu (Agaram) in the above land S. No. 382/1 were evicted on 12th July 1968 by the Tahsildar, North-West, Madras, without any prior intimation;

(*c*) whether the above land has subsequently been taken over by the Madras Housing Unit of the State Housing Board for allotment of house-sites to the Tamil Nadu Secretariat Association, the Tamil Nadu Non-gazetted Officers Union and The Tamil Nadu Last Grade Government Servants' Association; and

(*d*) if so, the action taken to rehabilitate the original hut dwellers?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) ஆம்.

(இ) இல்லே.

1970 செப்டம்பர் 9]

(உ) இல்லை.

(எ) இக்கேள்விக்கு இடமில்லை.

DR. H. V. HANDE : Sir, may I know whether representation was received from this Association with regard to irregularities and if so, the action taken by the Government to set right the irregularities alleged to have been mentioned in the representation?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : சில பேர்கள் அந்த இடத்தில் போய் முத்துவேலப்பர் குடியிருப்பு என்றும், அகரம் பொதுநல மன்றம் என்றும் ஆக்கிரமிப்புச் செய்திருக்கிறார்கள். இது எல்லாம் 1969-இல் நடந்தது. இந்த நிலத்தை அரசாங்கம் அரசாங்க ஊழியர்களுக்கு குடியிருப்பு மனைக்காக பட்டா செய்துகொடுக்க நடவடிக்கை எடுத்துக் கொண்டிருந்தது. அதற்குள்தான் ஒருவர் அந்த நிலத்தை தமக்குச் சொந்தமானது என்று சில பேர்களுக்கு கூறுபோட்டு விற்கவும் ஆரம்பித்தார். வாங்கினவர் குடிசைபோட முயன்றார். அரசாங்கம் டிரஸ்பாசர்கள் என்ற முறையில் அவர்களை அப்புறப்படுத்தி, வழக்கும் தொடர்ந்திருக்கிறது.

DR. H. V. HANDE : Sir, in a number of places some persons go and put up some flag or other and say that that particular area belong to them and then they sell the lands there. It is only after their sale that the Government wake up and say that they belong to them. So, will the Government put up a board with the inscription that they are poramboke lands and that they belong to them, so that no such fraudulent transactions could take place?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : எந்த போர்டு இருந்தாலும் ஏமாறுகிறவர்கள் இருக்கிறவரை ஏமாற்றுகிறவர்கள் இருக்கத்தான் செய்வார்கள். ஏமாறுகிறவர்கள் குறைந்தால் எல்லாம் சரியாகிவிடும்.

திருப்பூர் நகராட்சிப் பள்ளிக்கு இடம்

*319 வினா.—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகராட்சி மன்றம், பள்ளிக்கு இடம் கேட்டு விண்ணப்பித்தது சம்பந்தமாக திருப்பூர் சட்டப்பேரவை உறுப்பினர், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுக்கு 1969 ஆகஸ்டு மாதத்தில் ஓர் விண்ணப்பம் தந்தாரா?

(இ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) ஆம்.

(இ) திருப்பூர் நகராட்சிப் பள்ளிக்கென விண்ணப்பிக்கப்பட்ட திருப்பூர் நகரம், நல்லூர் கிராமத்தைச் சேர்ந்த T.S. 705/2 என் கொண்ட இடத்தை ஆக்ரமிப்பு செய்திருப்பவரை வெளியேற்றுவதற்கு எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் உயர்நீதி மன்றத்தால் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

திரு. சு. துரைசாமி : உயர்நீதி மன்றத்தில் இருக்கிற அந்தத்தடையை நீக்கி விரைவில் அந்த இடத்தைப் பள்ளிக்கு மாற்ற நடவடிக்கை எடுக்குமா?